

தமிழ்நாட்டில் விசில் சத்தம் மக்கள் கதறல் சத்தமாக மாறியது!

சாமானிய – நடுத்தர குடும்பங்கள் கடும் பாதிப்பு:

தி.வெ.க. ஆட்சியில் விண்ணை முட்டும்

விலைவாசி உயர்வு!





சென்னை, அக். 9- தி.வெ.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து, தமிழ்நாட்டில் அரிசி விலை தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளது. மூட்டைக்கு ரூ.600 வரை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் ஒரு கிலோ அரிசி ரூ.100 வரை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் எச்சரித்துள்ளனர். அதே போல பருப்பு, எண்ணெய், பூண்டு, சின்ன வெங்காயம் விலையும் கடுமையாக ஏறியுள்ளது. இதனால் ஏழை, நடுத்தர மக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கடந்த ஓரிரு மாதமாக அரிசி, பருப்பு, எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது. அதே போல காய்கறி விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் அரிசி விலை வாரம் ஒரு முறை என்று மீண்டும், மீண்டும் என கிடு, கிடுவென உயர்ந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணமாக தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை பொய்த்துப்போனதன் காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

கர்நாடகாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு காவிரியில் உரிய நீர் திறந்துவிடப்படாததால், முப்போகம் விளையவில்லை. மேலும் தமிழ்நாட்டில் சன்னரக அரிசி உற்பத்தி போதுமான அளவில் இல்லை. ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மேற்கு வங்காளம், மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, சன்னரக நெல் அதிகளவில் தமிழகத்திற்கு வருகிறது. இங்குள்ள அரிசி ஆலைகள் வாயிலாக அது கொள்முதல் செய்யப்பட்டு, அரிசியாக்கி விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி தட்டுப்பாடு!

உள்ளூர் தேவைக்கு போக வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அரிசி அனுப்பிவைக்கப்படுகிறது. தற்போது தமிழகம் மட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களிலும் அரிசி தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விலை கிலோ ரூ.20 முதல் ரூ.40 வரை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் உள்ள அரிசி ஆலைகளில் நெல் கையிருப்பு குறைந்துள்ளதால், அரிசி விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. தீபாவளி பண்டிகைக்கு முன் ஒரு கிலோ அரிசி ரூ.100-க்கு விற்கப்பட வாய்ப்புள்ளதாக அரிசி ஆலைகள் தரப்பில் கூறப்படுகிறது. எனவே, வெளிமாநிலங்களில் இருந்து நெல் கொள்முதலை அதிகரித்து அரிசி ஆலைகளில் சேமித்து வைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஆனால், ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வரும் நெல் மூட்டைகளை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள், போலீசார் துணையுடன் திருப்பி அனுப்பி வருகின்றனர். இதனால் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு விலை கணிசமாக உயரும் என நெல் வியாபாரிகள், கமிஷன் ஏஜென்டுகள், அரிசி ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ரூ.1,400-க்கு விற்பனை செய்யப்பட்ட டீலக்ஸ் பொன்னி தற்போது ரூ.1,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.1,600-க்கு விற்பனை செய்யப்பட்ட பொன்னி அரிசி ரூ.1,950-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.1,900-க்கு விற்பனை செய்யப்பட்ட வெள்ளை பொன்னி அரிசி ரூ.2,300-க்கு விற்பனை செய்யப்படுகிறது. 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட இட்லி அரிசி ரூ.1,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.1,500-க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சரிசி ரூ.1,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோன்று 25கிலோ எடை கொண்ட சிவாஜி பொன்னி அரிசி ரூ.1,800-ல் இருந்து ரூ.2,400 ஆக உயர்ந்துள்ளது. 30கிலோ எடை கொண்ட பாஸ்மதி அரிசி ரூ.3,300-ல் இருந்து ரூ.3,600 ஆக உயர்ந்துள்ளது. அதாவது ஒரு மூட்டை அரிசி ரூ.300 முதல் ரூ.600 வரை அதிகரித்து உள்ளது.

வெளிமாநில நெல் வரத்தைத் தடுத்து நிறுத்துவதை நிறுத்தி, உடனடியாகக் கொள்முதலை அதிகரித்துச் சேமிக்க வில்லை எனில், தமிழகத்தில் கடுமையான அரிசி பஞ்சம் ஏற்படும் என நெல் வியாபாரிகள் மற்றும் கமிஷன் ஏஜென்டுகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு!

ஏற்கனவே, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வால் ஏழை, நடுத்தர மக்கள் கடும் பாதிப்புக் குள்ளாகி வருகின்றனர். இந்த நிலையில் அரிசி விலை போட்டி போட்டு உயர்ந்து வருவது அவர்களை மேலும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. ஜனவரியில் புது அரிசி வரும் வரை விலை குறைய வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் கூறியுள்ளனர்.

அதே நேரத்தில் தீபாவளி பண்டிகை எதிரொலியாக சமையல் எண்ணெய் விலையும் தற்போது அதிகரித்து வருகிறது. மத்திய அரசு சமையல் எண்ணெய் இறக்குமதி வரியை குறைத்துள்ள நிலையில், பண்டிகை காலம் தொடங்கியுள்ள தால் சமையல் எண்ணெய் வகைகளின் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு லிட்டர் எண்ணெய் விலை ரூ.10 முதல் ரூ.20 வரை அதிகரித்துள்ளது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆர்டர்கள் அதிகரித்துள்ளதால், சமையல் எண்ணெய் விற்பனையும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக கடந்த மாதத்தை ஒப்பிடும்போது, ஒரு லிட்டர் எண்ணெய் விலை ரூ.10 முதல் ரூ.20 வரை அதிகரித்துள்ளது. இந்தியாவின் சமையல். எண்ணெய் தேவையில் சுமார் 60 சதவீதம் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. இதற்கிடையே, கடந்த செப்டம்பர் 24ம் தேதி மத்திய அரசு சமையல் எண்ணெய் இறக்குமதி வரியை குறைத்தது. இறக்குமதி வரி குறைப்பு அதன்படி, சுத்திகரிக்கப்படாத பாமாயில் மற்றும் சோயா எண்ணெய்க்கான இறக்குமதி வரி 10 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக அதே குறைக்கப்பட்டது. போல், சுத்திகரிக்கப்படாத சூரியகாந்தி எண்ணெய்க்கான 10 சதவீத இறக்குமதி வரி முற்றிலும் நீக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

மொத்த விலை உயர்வு சமையல் எண்ணெய் விலையும் அதிகரித்துள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் லிட்டர் ரூ.130-க்கு விற்பனையான பாமாயில், அக்டோபர் மாதத்தில் ரூ.140 ஆக இதே உயர்ந்துள்ளது. போல், ரூ.150-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சூரியகாந்தி எண்ணெய் விலை தற்போது ரூ.160 ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தீபாவளி நெருங்க நெருங்க சமையல் எண்ணெய் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் கூறியுள்ளனர். அதே போல, பூண்டு, சின்ன வெங்காயம் விலையும் கடுமையாக ஏறியுள்ளது. அதில் சின்ன வெங்காயம் ரூ.140 ஆக உயர்ந்துள்ளது. வெங்காயத்தை நினைத்தாலே கண்ணீர் வரும் அளவுக்கு விலை ஏற்றத்தை கண்டுள்ளது.

பண்டிகைக் காலம் நெருங்க நெருங்க சமையல் எண்ணெய் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு?



ஆனால் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த வேண்டிய அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

நாளுக்கு ஒரு விலை உயர்ந்துள்ளது. ஆனாலும் தி.வெ.க. அரசு கண்டு கொள்ளவில்லை. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்த தி.வெ.க. அரசு!



கழகத் தலைவர் அவர்களின் அன்பைப் பெற்ற, கழக மூத்த முன்னோடியும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவரும், அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் அவர்களின் 80 வது பிறந்த நாளை முன்னிட்டு மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ந.ராமலிங்கம் அவர்களை வாழ்த்தினர். இதில் சபரீசன், ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், நே.சிற்றரசு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., அன்பகம் கலை, மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி, துணை மேயர் மு.மகேஷ்குமார், எம்.கே.மோகன், ப.தாயகம் கவி, பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, ச.பரமசிவம், எஸ்.மதன்மோகன், வினோத் வேலாயுதம், கே.ஏழுமலை, கோ.சு.மணி, ராஜா அன்பழகன், எம்.கிருஷ்ணமூர்த்தி, கே கண்ணன், மு.இராசா, வே.வாசு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

இருபது பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் இல்லை;

பொறுப்புத் துணைவேந்தர் நியமனம் சட்டத்திற்குப் புறம்பானது; தவறான முன்மாதிரி!

சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவை சார்பில் மா.செல்வராசன் அறிக்கை!

சென்னை, அக்.9- தமிழ்நாட்டில் சென்னைப் பல்கலைக்கழகம் முதலாக மாநிலப் பல்கலைக்கழகங்கள் இருபத்து ஒன்று இருக்கின்றன. இருபது பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் பதவிகள் நிரப்பப்படாமல் வெற்றிடங்களாக உள்ளன. குறிப்பாக, 1857-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற இந்தியாவின் மூத்த தமிழ்நாட்டின் முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகம் 20.08.2023 முதல் முப்பத்தேழு மாதங்களாகத் துணைவேந்தர் இல்லாமல் தொய்ந்து கிடக்கின்றது.

ஒரு துணைவேந்தர் பதவிக் காலம் முடிந்ததும் அடுத்த நாளே புதிய துணைவேந்தர் பொறுப்பேற்பது 1976 வரை நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் அதன் பிறகு ஆளுநருக்கும் அரசுக்கும் முரண்பாடு ஏற்பட்டதால் துணைவேந்தர் நியமனங்களில் காலத் தாழ்வு ஏற்பட்டது.

துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநரிடம் இருப்பதால்தான் இந்தத் துயரம் என்பதை உணர்ந்து. அன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்கு இருந்த துணைவேந்தர் நியமன அதிகாரத்தை அரசுக்கு,அதாவது முதலமைச்சருக்கு மாற்றிச் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். அச்சட்டத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுத் தீர்ப்பு வழங்கினாலும் அரசியல் உள்நோக்கத்தோடு தொடுக்கப்பட்ட வழக்கால் முடிவு உயர்நீதிமன்றத்திற்கும் உச்சநீதிமன்றத்திற்கும் இடையே ஊசல் ஆடிக் கொண்டிருக்கின்றது.

வழக்கு நிலுவையில் இருப்பதற்கு ஒன்றிய அரசே உட்காரணம் என்பது உணரக்கூடிய ஒன்று. நீதி மன்றங்களோ ஒரு மாநிலத்தின் உயர்கல்வி உறங்குவதைக்கண்டு ஒரு சிறிதும் உணராமல் ஒத்திவைத்துக் கொண்டுள்ளன. வழக்கு நிலுவையில் இருந்தாலும் தீர்ப்பு வரும் வரையில் இருக்கின்ற பல்கலைக்கழகச் சட்டத்தைப் பயன்படுத்தித் துணைவேந்தர்களை நியமிக்கலாம்.

ஒன்றிய அரசோடு ஒத்துப் போகின்ற இந்த அரசு ஆளுநரை வழிக்குக் கொண்டுவராமல் பொறுப்புத் துணைவேந்தர்களை நியமிக்கும் புதுப் போக்கினை நடைமுறைப்படுத்த முயல்வது துணைவேந்தர் நிலையைத் தாழ்த்துவதாக உள்ளது!

சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம் 1923 தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்தச் சட்டத்தின். அடிப்படையிலேயே மற்றப் பல்கலைக்கழகங்களின் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.சென்ட் சிண்டிகேட், ஆளுநர் தேர்ந்தெடுக்கும் மூன்று கல்வியாளர்களை கொண்ட தேடற்குழு நீண்ட ஆய்விற்குப் பிறகு பரிவுரை செய்யும் மூன்று கல்வியாளர்களுள் அல்லது பல்கலைக்கழக நிலையிலான மூன்று பேராசிரியர்களுள் ஒருவரை ஆளுநர் நியமிக்க வேண்டும் என்பது சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம்.

இந்த நடைமுறைக்கு மாறாகப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் மூத்த பேராசிரியர்களுள் ஒருவரைப் பொறுப்புத் துணைவேந்தராக நியமிப்பது பல்கலைக்கழகச் சட்டத்திற்கு எதிரானது; தவறான முன்மாதிரியைத் தருவது. நூற்றுக்கு மேற்பட்ட கல்வியாளர் விண்ணப்பங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கும் மூவர்க்குள்ள தனித்திறன் சிண்டிகேட் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு முழுமையாக இருக்கும் என்று கூற முடியாது.

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒருவரிடம் துணைவேந்தர் பொறுப்பை முழுமையாக அளிப்பதால் விருப்பு வெறுப்புக்கு இடமளிக்க வாய்ப்புள்ளது.

மேலும் முன்பே குறிப்பிட்டதுபோல் துணைவேந்தர் நிலையைத் தாழ்த்துவதாகும். ஓர் எந்திரத்தை வைத்தால்கூட் விதி மீறாமல் இயங்கும். ஆனால் வளர்ச்சிதான் வராது.

ஒன்று; வழக்கை விரைவாக முடித்து நல்ல தீர்ப்பைப் பெறுவது!

இரண்டு ; வழக்கில் காலத் தாழ்வு ஏற்படுவதால் நீதி மன்ற இசைவுடன இருக்கின்ற சட்டப்படி முழுநேரத்துணைவேந்தரை நியமிப்பது!

மூன்று : துணைவேந்தர் இல்லாத போது ஆட்சி மன்ற உறுப்பினர் உட்குழு பொறுப்பேற்பது தவறுகள் நடவாமல் இருக்க வாய்ப்பாகும்! எனவே இப்போதுள்ள குழுவை அவ்வப்போது மாற்றி அமைத்தால் போதும்!

நான்கு: பொறுப்புத் துணைவேந்தர் என்ற புதுப்போக்கு பொருத்தமற்றது; பல்கலைக்கழகச் சட்டத்திற்குப் புறம்பானது; தவறான முன்மாதிரி ஆவது. எனவே இந்த முயற்சியை அல்லது முடிவை இந்த அரசு கைவிடுவது நல்லது.

இவ்வாறு சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவைத் தலைவரும் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவரும் ஆன பேராசிரியர் மா.செல்வராசன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.